**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 113/2022 தேதி- 21.04.2026
(PW.2) – பாலையன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.எனது சொந்த ஊர் எது என்றால் திருநந்திக்கரை ஆகும். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு விவரங்களை எல்லாம் எனக்கு யார் சொல்லி கொடுத்தார்கள் என்றால் நான் தான் வழக்கறிஞருக்கு சொல்லிக் கொடுத்தேன். இந்த வழக்கில் நான் கட்சியினர் கிடையாது என்றால் சரிதான், நான் சாட்சி ஆவேன். நான் சொல்லிக் கொடுத்த விவரத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. ஆவண எண்.1631/1955 என்று ஒரு ஆவணத்தை பற்றி என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய சொத்தின் சர்வே எண் என்ன என்றால் நினைவில் இல்லை. என்னுடைய சொத்தின் நான்கு பக்க எல்கைகள் என்ன என்றால் மேற்கு பக்கம் சந்திரசேகர் நாயர், வடக்கு பக்கம் ஹாரிஸ் நாடார், கிழக்கு பொன்னையன் நாடார் மற்றும் தெற்கு பக்கம் காடு அமைந்துள்ளது.

3. இந்த வழக்கில் எத்தனை பிரதிவாதிகள் உண்டு என்றால் இரண்டு பேர் ஆகும். இந்த வழக்கை பற்றி வேறு என்ன விவரம் தெரியும் என்றால் கண்ணன் பாதையை அடைத்துள்ளார். மேற்சொன்ன பாதை எப்போது அடைக்கப்பட்டது என்றால் 2, 3 வருடங்களுக்கு முன்பு பாதை அடைக்கப்பட்டது. பாதை அடைத்த பிறகு எங்கள் கண்டத்திற்கு சென்று வர சுற்றி சென்று வருகிறோம் என்றால் சரிதான்.

4. சுற்றி வழக்கு பட்டிகை சொத்திற்கு சென்று வர பாதை உள்ளதா என்றால் அருகாமையில் உள்ள நபர்களின் கண்டங்களின் வழியாக தான் செல்ல முடியும். வழக்கு B பட்டிகை சொத்தின் வழியாக சென்றால் எளிதாக செல்ல முடியும் என்றால் சரிதான், முன்னோர்கள் வழக்கு B பட்டிகை சொத்தை தான் பாதையாக பயன்படுத்தி

வந்தார்கள். என்னுடைய சொத்து வழக்கு B பட்டிகை சொத்தில் இருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் வாதியின் சொத்தை தொட்டு அமைந்துள்ளது.

5. செல்லைய்யன் என்னுடைய கண்டத்தை பாதையாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எந்த ஆவணமும் இல்லை என்றால் கங்காதரன் எழுதிக் கொடுத்த ஆவணத்தில் பாதையை பற்றி சொல்லப்பட்டுள்ளது. கங்காதரன் சொத்து வாதி சொத்தில் இருந்து எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் வாதி சொத்தின் தெற்கு பக்கம் அமைந்துள்ளது. வாதியின் தெற்கு பக்கம் கங்காதரன் சொத்து அமைந்துள்ளது என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஆவணம் ஏதும் இல்லை.

6. கங்காதரன் சொத்து தெற்கு பக்கம் உள்ளது என்று நான் சொல்வது பொய் என்றாலும், மேற்கு பக்கம் தான் கங்காதரன் சொத்து அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எனக்கு சொத்து எவ்வாறு கிடையாது என்றால் என் அப்பாவின் குடும்ப சொத்தாகும். என்னுடைய ஆவணத்தில் என் கண்டத்தின் வழியாக வேறு நபர்கள் பாதையாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பு எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

7. பொதுவாக வேறு ஒருவடைய சொத்தின் வழியாக அவரின் அனுமதியில்லாமல் பாதையாக பயன்படுத்த முடியாது என்றால் சரிதான். செல்லைய்யன் எந்த ஆவணத்தையும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும், மூன்றாம் தரப்பினர்கள் செல்லைய்யன் சொத்தின் வழியாக பாதையாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கங்காதரன் பாதையாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லியுள்ள நிலையில், அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. உண்மையிலேயே மேற்சொன்னவாறு ஒரு ஆவணம் ஏற்படுத்தப்பட்டு இருந்தால் அந்த ஆவணத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து உண்மை நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கலாம் என்றாலும், அவ்வாறு எந்த ஆவணமும் இல்லாததால் தான் நீதிமன்றத்தில் மேற்சொன்ன ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. கங்காதரனுக்கும், இந்த வழக்கு பட்டிகை

சொத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றாலும், கங்காதரன் சொத்து வேறு சொத்து என்றால் சரியல்ல. முத்துசாமி நாடார் என்பவர் யார் என்றால் என்னுடைய சித்தப்பார் ஆவார். அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று ஆண் பிள்ளைகள், நான்கு பெண் பிள்ளைகள் ஆகும்.

9. முத்துசாமி நாடாருடைய சொத்தை பங்கு வைத்த போது மேற்சொன்ன நான்கு பெண் பிள்ளைகளுக்கும் பங்கு வைக்கப்பட்டதா என்றால் பங்கு வைக்கப்பட்டது. வழக்கில் கோரியுள்ளவாறு வழக்கு C பட்டிகை சொத்து என்று ஒரு பாதை இல்லை என்றாலும், புதியதாக அமைக்கப்பட்ட 6 மீட்டர் அகலம் கொண்ட ரோட்டில் இருந்து வாதியின் சொத்திற்கு பாதை ஏற்படுத்த வேண்டும் என்றும், வாதியின் ரியல் எஸ்டேட் தொழில் செய்ய வேண்டியும் தாக்கல் செய்துள்ள பொய்யான வழக்கில் வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க வாதிக்கு ஆதரவாக பிரதிபலன் பெற்று நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாதை இருப்பதை காண்பிக்க எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.